# பாடத்திட்டம்

## பொதுத் தமிழ்

**Code: 002**

### எஸ்,எஸ்,எல்,சி, தரம்

### (விரிவான விடை அளிக்கும் அளைத்து தேர்வுகளுக்கும், தொகுதி I பணிகளடங்கிய முதன்மைத் தேர்விற்கும் பொருந்தும்)

**I** பொருத்திக் காட்டுதல்
(அ) புகழ் வாய்ந்த இலக்கிய மேற்கோள்களும் இடம் பெறும் இலக்கியங்களும் - ஆசிரியர்களும்,
(ஆ) சிறப்பான பொன்மொழிகள் - அறிஞர்கள்,

**II** வாக்கியத்தில் அமைத்து எழுதுதல் - உவமைகள். பழமொழிகள் அருந்தொடர்கள் மரபுத்தொடர்கள் (செறிவினை-முரணிணை),

**III** வடிவத்தாலும்-ஒலிப்பாலும் ஒத்த பிறசொற்களை எழுதச் செய்தல், ர-ற. ன-ண. ந. ஒலி ஒப்புமைச் சொற்கள். எதுகைச் சொற்கள். இடம் பெற்றுள்ள பத்தியாகத் தேர்ந்தெடுத்து பத்து இடங்களில் எழுதும் வாய்ப்புக் கொடுத்தல் வேண்டும்,

**IV** ஒரு சொல்லின் பகுதியைக் கொடுத்து அதனைப் பல வடிவமாக்கி எழுதச் செய்தல். எடுத்துக்காட்டு-வா. வருக. வந்த வந்தான். வந்து. வந்தவனை. வருதல்,

**V** கொடுக்கப்பெறும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதச் செய்தல் - மயங்கொலிப் பிழைகள். சந்திப்பிழைகள் ஒருமைப்பன்மைப் பிழைகள். வழூஉச் சொற்கள். மரபுப் பிழைகள் - ஆகியவை இடம் பெறவேண்டும்,

**VI** வாக்கிய மாற்றம் (எவையேனும் ஐந்து)-
(1) செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குதல்,
(2) செயப்பாட்டு வினையைச் செய்வினையாக்குதல்,
(3) செய்திவாக்கியத்தை உணர்ச்சி வாக்கியமாக மாற்றுதல்,
(4) செய்தி வாக்கியத்தை வினாவாக்கியமாக மாற்றுதல்,
(5) நேர்கூற்று-அயற்கூற்று,
(6) விடைக்கேற்ற வினா உருவாக்குதல்,
(7) உரையாடலைச் செய்தியாக்குதல்,

**VII** கடிதம்- விண்ணப்பம் எழுதுதல்
(1)வாழ்க்கை வசதி வேண்டி உரியோருக்கு விண்ணப்பித்தல்,
(2)பொது வாழ்க்கையில். சமுதாயக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி முறை வேண்டுதல் விண்ணப்பம் (புகார் விண்ணப்பம்)
(3)அலுவலகக் கொள்கை முடிவு-செயல்திட்ட விளக்கம் ஆகியவற்றைச் செய்திதாளுக்கு அனுப்புதல் கடிதம்,

**VIII** மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுதல் ஐநூறு சொற்கள் கொண்ட உரைநடைப் பகுதியாக இருத்தல் வேண்டும்,
இலக்கியம். அறிவியல். பொருளியல். மருத்துவம். தொழில் நுட்பம் முதலான பல்துறைக் கருத்துக்களையுடைய பத்திகளைத் தேர்ந்தேடுத்தல் வேண்டும்,

**IX** கட்டுரை எழுதுதல் 300 சொற்களுக்குக் குறையாமல். இலக்கியம். சமூகம். பொருளாதாரம். பண்பாடு. அரசு நலத்திட்டங்கள் முதலான தலைப்புகளுள் மூன்று தலைப்புகள் கொடுத்து ஒன்று எழுதச் செய்க,

**X** பொருளுணர்வு திறன் 500 சொற்களில் அமைந்த ஒரு சிறந்த உரைநடைப்பகுதியை அளித்து. ஐந்து வினாக்கள் கொடுத்து ஏற்ற விடைகளை எழுதச் செய்க, வழங்கப் பெறும் வினாக்கள். மையக்கருத்து. உய்துணர்தல். தொகுத்துச் சொல்லல். தொடர்பு அறிதல். முடிவு கூறல் முதலான தன்மைகளை வெளிப்படுத்துமாறு அமைத்தல் வேண்டும்,

**XI** மொழிபெயர்ப்பு - தமிழாக்கம் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து எழுதுக எனக் கேட்கலாம்,
(அ) பழமொழிகள் - 2. உயர்ந்த கருத்து - 1. சமூக விழிப்புணர்வுக் கருத்து - 1. வாழ்த்துச் செய்தி -1,
(ஆ) அரசாணை. நாளேட்டில் வெளிவந்த ஏதேனும் ஒரு செய்தி. அரசின் அறிவுறுத்தல். சிறு கதைப்பகுதி போன்ற ஏதேனும் ஒன்று 10 வரிகளுக்கு மிகாமல் கொடுக்கப் பெறலாம்,

**XII** மொழிப் பெயர்ப்பு -ஆங்கில ஆக்கம் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக எனக் கேட்கலாம்,
(அ) அன்றாட வாழ்க்கையில் நடக்கக்கூடிய ஏதேனும் ஒருசிறு நிகழ்ச்சி. கட்டளை. வேண்டுகோள். ஒரு சிறு உரையாடல் போன்ற எவையேனும் இரண்டு சொற்றொடர்கள் கொடுக்கப் பெறலாம்,
(ஆ) அறிவியல். கலை. கணிப்பொறி. சான்றோர் கருத்து முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று 12 வரிகளுக்கு மிகாமல் கொடுக்கப் பெறலாம்,,